முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தண்யடிகள் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.12.2018, ஞாயிற்றுக்கிழமை

**1.** **தருமசக்தியே ஞானதேசிகா**
**தன்னார்வ தொண்டு வளர்த்து**
**கரும வினையை மக்களுக்கு விரட்ட**
**கருணாமூர்த்தியாக வந்த அரங்கா**

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் **விளம்பி சிலை திங்கள்**
**வரங்களென ஏகதிகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 1ம் நாள் 16.12.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**வழங்கிடுவேன் ஒளி சூட்சும நூலை**

**3.** **நூலை தண்யடிகள் நாயனார் யானும்**
நிலவுலக நலம் கருதி உரைப்பேன்
ஞாலமெங்கும் உன் தருமமதும்
நம்பகமுடன் வளர்ச்சி காண

4. காணவே கழனி மக்களின்
கட்டங்கள் யாவும் விலகும்
தானதரும சிந்தை பெருகவே
தரணியெங்கும் இயற்கை அமைதி குலையா

5. அமைதி குலையா அறம் ஆக நின்று
அகிலம்தன்னை காக்குமப்பா
அமைதி குலைய பேராசை பெருகி
ஆணவம் கன்மம் மாயை வழி

6. வழிதனில் மன்னர் மக்களென
வகை கெட்டு தொடரலானால்
அழிவு கூடிட இயற்கை பேரிடராக
அச்சமூட்டும் மக்களை நோக்கி

7. நோக்கி தாக்கி புவி தன்னை
நிலைகுலையச் செய்ய நேரிடும்
ஆக்கமுடன் அன்னதனால் மக்களே
அறிவிப்பேன் இனியும் காலம் கடத்தா

8. காலம் கடத்தா துறையூர் எல்லை
கந்தவேலன் சக்தி வடிவாக
காலம் வென்ற ஞானி அரங்கனை
கண்டு வணங்கி மக்களெல்லாம்

9. மக்களெல்லாம் தருமநெறி ஏற்று
மண்ணுலகில் தயவு பெருக்கிடும்
ஊக்கமுடன் தருமம் வளர்த்திட
உண்மைபட கொல்லா நெறி ஏற்று

10. ஏற்றுமே சன்மார்க்கம் வழி வாழ
ஏழ்மை வசதி சாதி மத பேதமிலா
ஒற்றுமை நிலை வளர்த்து வாழ்ந்திட
ஓங்காரன் அருளாசி அடைந்து

11. அடைந்து ஞானவான்கள் தலைமை
ஆளுமை கூடி கலியுகமே
சோடையிலா ஞானயுகமாகும்
செப்பிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் தண்யடிகள் நாயனார் அருளிய சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லாது தர்மங்களை செய்து செய்து உலகின் தர்மசக்தியை பெருக்கிய தருமசக்தியே ஞானதேசிகனே அரங்கா உலக மக்களிடத்து தன்னார்வ தொண்டினை வளர்த்து கருமவினைகளை மக்களிடமிருந்து விரட்டி அவர்களைக் காத்து கடைத்தேற்றிடவே முருகப்பெருமானின் அவதாரமாக கருணாமூர்த்தியாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் முதல் நாள் 16.12.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே தண்யடிகள் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தண்டியடிகள் நாயனார்.

உலகமெங்கும் அரங்கா உமது தருமத்தினை மிகவும் நம்பிக்கையோடு மக்களெல்லாம் ஏற்று செய்து, உலகினில் தர்மத்தினை அதிகமாக செய்திட செய்திட உலகினில் விவசாய மக்களின் கஷ்டங்கள் யாவும் விலகிடுமப்பா. தானதரும சிந்தை மக்களிடையே பெருகபெருக உலகமெங்கும் இயற்கை அமைதி காணுமப்பா. இயற்கையை தமது அமைதி குலையாமல் அறமாக நின்று இவ்வுலகை காத்திடும்.

மக்களிடையேயும், நாட்டை ஆள்பவர்களிடத்தும் இயற்கை அமைதி குலையும் வண்ணமாய் பேராசைகள் உலகில் பெருகி ஆணவத்தினாலும் வஞ்சனைகளாலும் பழி வாங்கும் உணர்வுகளுக்கும் ஆட்பட்டு மாயையின் வழி மக்களும் ஆட்சி பொறுப்பில் உள்ளவர்களும் சென்று தீமையான வழிகளிலே மீண்டும் நடந்திட்டார்களேயானால் உலகில் அழிவு பெருகிடும். உலகினில் இயற்கை பேரிடர்கள் உருவாகி மக்களை அச்சுறுத்தும், கொடும் துன்பங்களை உண்டாக்கும் இயற்கையும் மக்களை தாக்கி புவியை நிலைகுலையச் செய்ய நேர்ந்திடும்.

ஆதலினாலே உலக மக்களே இனியும் நீங்களெல்லாம் காலம் கடத்தாமல் ஞானபூமியாம் ஏழாம் படை வீடு அமைந்திட்ட யோகபூமியாம் துறையூருக்கு வந்து ஓங்காரக்குடிலை நாடிச்சென்று ஆங்கே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அமர்ந்து காலத்தை வென்றிட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கனை பயபக்தியுடன் பணிந்து வணங்கி அரங்கன் கூறும் தருமநெறிகளை ஏற்று தருமங்களை செய்து உலகில் தயவினை பெருக்கிடும்விதமாக ஊக்கமுடன் தருமங்களை தளராது செய்து வருவதுடன் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவஉணவை மேற்கொண்டு ஞானம் அளிக்கும் மார்க்கமான சன்மார்க்கத்தை ஏற்று சன்மார்க்க வழி வாழ்ந்திட உலகினில் ஏழ்மை இருக்காது, பணக்காரன் ஏழை பாகுபாடு மாறும், சாதி, மத, இன பேதம் இல்லாத ஒற்றுமை நிலை உலகினில் வளர்த்து வாழ்ந்திட வேண்டும்.

அவர்களெல்லாம் முருகப்பெருமானின் அருளாசிகளைப் பெற்று ஞானவான்கள் தலைமையில் உலகினில் ஞானஆட்சி பெருகி இந்த கலியுகமே அரங்கன் அருளால் மாற்றம் அடைந்து ஞானயுகமாக ஆகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் தண்டியடிகள் நாயனார்.

–சுபம்–